# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X




காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:5 Issue : 17 January 2023*
கோட்டை :5 வாயில்:17 ஜனவரி 2023

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

# Aran

*International e Journal of Tamil Research*

ISSN: 2582-399X



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

### நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

### முதன்மை ஆசிரியர்

பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

அனைவருக்கும் வணக்கம்

நமது அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் ஐந்தாவது ஆண்டில் (2023) அடி எடுத்து வைக்கின்றது. எங்களுடன் பயணித்த அனைத்து பேராசிரியர் பெருமக்களுக்கும், துறைசார் வல்லுநர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். தொடர்ந்து உங்களது ஆதரவை எங்களுக்கு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றியும் பேரன்பும்.

*Hi everyone*

*Aran Internaitional e Journal of Tamil Research continuings way into fifth year(2023) . We area greatful to all the professors,academics and research students who travelled with us. We warmly request you to continue to support us . Thank you with Love.*

அன்புடன்
முனைவர். பிரியாகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
*www.aranejournal.com*
*aranjournal@gmail.com*
*PH: +917299587879*

# அகத்தினுள்


**கம்பராமாயணத்தில் போர் அறம்**
முனைவர். க.மங்கையர்க்கரசி

**அறப்பளீஸ்வரர் சதகத்தில் தனிமனித ஒழுக்கம்**
முனைவர் தே. தேன்மொழி

**புறநானூற்றில் அரசியல் மானுடம்**
முனைவர் மு.கோலகநாயகி.

**இந்துக்கோயிற்கிரியைகளில் நாட்டியக் கலையின் வகிபங்கும் இலங்கையில் அதன் பயில் நிலையும்**
*கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்.*

**ஆத்மனின் பரிதவித்தல்: திருவாசகம் -நீத்தல் விண்ணப்பத்தினை முன்னிறுத்தியநோக்கு**
*திரு.சி.ரமணராஜா.*

**சைவ வாழ்வியலில் சிவா கமங்கள் கூறும் சிவதீட்ஷையின் வகிபங்கு**
*திருமதி. கவிதாகதிரமலை.*

**வர்மக்கலையும் மனவளக்கலையும்**
*இரா. சந்துரு*

**மகாகவி பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் நவரஸம் ஓர் வெளிப்பாடு ஆய்வுக்கண்ணோட்டம்**
*கலாநிதி. தாக்ஷாயினிபரமதேவன்*

**நான் கண்ட கவிக்கோ என்ற போதி மரம்**
*ம. ராகவன்*

**தமிழ் இலக்கிய மும் பருவ நிலை மாற்றமும்**
*ம.ராகவன்*

**இலக்கியம் - நில வெளி - மாந்தர்கள்**
*பா.சிவன்பாண்டி*

**Histochemical, Fluorescence, Heavy metals analysis, and Organic qualitative analysis of A. bracteolate Lam.**
*M. Gajarajan1*, M. Shareef Khan2*,*

**கல்வெட்டு வாயிலாகக் கோயில் கட்டுமானங்களில் குடிமக்களின் கொடையும் பங்களிப்பும் - ஓர் ஆய்வு**
*முனைவர். பிரியாகிருஷ்ணன்*



**முகப்பு**

**புகைப்படம், இணையம்**

**நன்றி**

# தொல்லியல்

# கல்வெட்டு வாயிலாகக் கோயில் கட்டுமானங்களில் குடிமக்களின் கொடையும் பங்களிப்பும் - ஓர் ஆய்வு

*முனைவர் பிரியாகிருஷ்ணன்*

**ஆய்வு நோக்கம்:**

தமிழகத்தில் உள்ள பல கோயில்களில் கிடைக்கும் கல்வெட்டுச் செய்திகள் வாயிலாக கோயில் பணிகளுக்காக அரசர், அரசி, அரசரின் உறவினர், அரசு அதிகாரிகள், தவசிகள், குடிமக்கள் ஆகியோரின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. அக்காலத்தில் கோயில் அரசனால் கட்டப்படுவது என்பது ஒரு மரபாக இருந்து வந்துள்ளது. இருப்பினும் அக்கோயிலுக்கு குடிமக்களும் தங்களால் ஆன கொடையினை தந்திருப்பது குடிமக்களின் உரிமையினை பறைசாற்றுவதாக அமைந்துள்ளது. அது குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

***Abstract:***

*Through inscriptions found in many temples in Tamil Nadu, the contribution of kings, queens, relatives of kings, government officials, residents and citizens is important for temple work. At that time, it has been a tradition that the temple is built by the king. However, the fact that the citizens have given their own donation to the temple is a declaration of the rights of the citizens. The purpose of this article is to investigate that.*

**முன்னுரை:**

கோயில் பணிகள் என்று சொல்லும்போது கோவிலைக் கட்டுதல்,சிற்பங்களை அமைத்தல்,திருமேனிகளை எழுந்தருளச் செய்தல், பூசை விழாக்கள் நடைப்பெறச் செய்தல், சமயப் போதனை அளித்தல், நந்தவனங்களை அமைத்தல், திருக்குளங்கள் வெட்டுதல், பலதரப்பட்ட கோயில் பணியாளர்களை நியமித்தல், சமயத் தொடர்பான நடனங்களையும் நாடகங்களையும் நடைபெறச் செய்தல்,

திருப்பதிகங்களை ஓதச் செய்தல், கோயில் அடுக்கு மடங்களை அமைத்தல், மடங்களில் சமயபோதனை செய்தல்,மருத்துவமனைகளை வைத்து நடத்தல், கோயில்களில் பலவகை மண்டபங்களை கட்டுவித்தல், மண்டபங்களில் சமயப் பிரச்சாரம் செய்தல், திருச்சுற்று மாளிகையில் சரசுவதி பண்டாரம் அமைத்தல், மடப்பள்ளிகள் அமைத்தல் போன்ற திருக்கோயில் பணிகள் உள்ளன. இவற்றில் எல்லாவற்றிலும் குடிமக்கள் பங்கு பெற்றுள்ளனர் என்பது தமிழகக் கோயில்களில் கிடைத்திருக்கும் பல கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகின்றது.

**ஆய்வுத் தரவுகள்:**

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி மற்றும் திருச்சி நகர கல்வெட்டுகள் ஆய்வுத் தரவுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**கோயிலின் பயன்பாடு:**

கோயில் என்பது இறைவணக்கம் செலுத்தும் ஒரு புனித இடமாகக் கருதப்பட்டதால் அங்கு வாக்குத் தூய்மையும் உள்ளத் தூய்மையும் வலியுறுத்தப்பட்டது. ஒவ்வோர் ஊர்க்கோயிலும் அவ்வூர் மக்களால் சமயத் தொடர்பான செயல்பாடுகளுக்கு மட்டுமல்லாமல் தம் வாழ்க்கைத் தொடர்பான செயல்பாடுகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. கோயில் மண்டபத்தில் ஊர்க்கூடி முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது.அறங்கூறும் அவையோரும் கோயில்களில் கூடியே தனது தீர்ப்புகளை வழங்கினர்.அரசனின் ஆணை முதற்கொண்டு மக்களின் பிணைக்குகள் வரை அனைத்தும் கோயில்களில் அறிவிக்கப்பட்டது.ஆதலால் கோயில் என்பது மக்களின் ஒரு அங்கமாகவேத் திகழ்ந்தது என்று கூறாலாம்.இதனால் அந்தந்தக் காலக்கட்டங்களில் ஏற்பட்ட அரசு மற்றும் ஆணைகள்,சமூக நிலை,வரலாறு ஆகியவற்றை அறிந்துகொள்ள கோயில் கல்வெட்டுகள் பலவாறு துணைபுரிகின்றன.

**இறைவனுக்கு பூமாலை சூட்ட கொடை:**

திருச்சிராப்பள்ளி சோழமாதேவி என்னும் ஊரில் திருக்கயிலாயமுடையார் கோயில் கருவறை வடக்குச் சுவரில் தமிழ் ,கிரந்த கல்வெட்டு முதலாம் இராஜராஜன் 8

ஆம் ஆட்சியாண்டைக் குறிப்பது. இக்கல்வெட்டுக் காலம் கி பி 993. இக்கல்வெட்டுச் செய்தியானது தென்கரை பிரம்மதேயம் சோழமாதேவி சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த மத்யஸ்தன் ஏறன் கூத்தன் என்பவன் திருநந்தவனம் அமைத்து அதைப் பராமரிக்க நிலங்கள் தானமாக கொடுத்துள்ளான்.நந்தவனத்தில் மல்லிகை, இருவாட்சி, சிறுசெண்பகம் மற்றும் பல மணமுள்ள மலர்கள் மற்றும் மரங்கள் ஆகியவற்றை பயிரிடப்பட்டு இறைவனுக்கு சூட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கிறது.

**நந்தவனம் அமைக்கக் கொடை:**

திருச்சிராப்பள்ளி மண்ணச்ச நல்லூர் பழூர் கிராமத்தில் தமிழ் கல்வெட்டு கி பி 1742 ஆம் ஆண்டைச் சேர்ந்தது.ஏரீஸ்வரசாமி கோயில் குளக்கரையில் உள்ள கல்வெட்டானது கோயிலுக்கு நந்தவனம் உண்டுபண்ணி ,அதில் தென்னம்பிள்ளைகளை வளர்ந்து அவற்றின் பலனைக் கோயிலுக்குத் தங்கமுத்தாபிள்ளை குமாரன் ராமகிருஷ்டிணன் அளித்த் செய்தி கலிவெட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

**நிலக்கொடை:**

திருச்சிராப்பள்ளி காருகுடி என்ற ஊரில் கி பி 1619 ஆம் ஆண்டு தமிழ் மற்றும் கிரந்தம் கலந்த கல்வெட்டு திருக்கயிலாயநாதர் கோயில் மகாமண்டபம் தெற்கு சுவரில் உள்ள செய்தி இம்மடி ராமச்சந்திர நாயக்கர் என்பவர் திருக்காரிகுடி கயிலாசமுடையார் கோயிலைச் சேர்ந்த கணக்கன் பெயரில் நிலக்கொடை வழங்கிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இதே திருக்கயிலாச நாதர் கோயில் மகாமண்டபம் தெற்குச்சுவரில் கி பி 1318 ஆம் நூற்றாண்டு வீரபாண்டியன் கல்வெட்டு தமிழ் மற்றும் கிரந்தத்தில் உள்ளது.வடகரை கரிகால சோழ வளநாட்டு திருக்காரிகுடியான விக்கிரம சோழபுரத்திலுள்ள திருக்கயிலாசமுடையார் கோயிலுக்கு தினமும் வழிபாடு செய்வதற்கும் சித்திரைத் திருவிழாவின்போது அமுதுபடி சாத்துபடி போன்ற செலவுகளுக்கும் திருமதிள் சுவர் உள்ளிட்ட பல திருப்பணிகள் செய்வதற்கும்

தேவதான இறையலியாக, ஊற்றக் கரையான அழகிய சோழ நல்லூர் என்ற ஊரக் கரிகால சோழவளநாட்டு நாட்டார்கள் இக்கோயில் கணக்கரிடம் தானமாக வழங்கினர் என்பதைத் தெரிவிக்கின்றது'.நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் மற்றும் கிரந்தம் கல்வெட்டு இராஜகேசரிவர்மன் கி பி 11 ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவரில் திருவேள்விக்குடியிலுள்ள நடுவில் ஸ்ரீகோயில் என்ற கோயிலுள்ள இறைவனுக்குத் திருவமுது படைத்து வழிபாடு செய்வதற்கு பிரமதேயம் முருகவேள் மங்கலத்து பாரதாயன் வேங்கடவன் ,சந்திராதித்தன் என்பவன் இறையலியாக நிலம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.இம்மன்னம் முதலாம் குலோத்துங்க சோழனாக இருத்தல் வேண்டும்.

**பைரவர் சிற்பம் கொடை:**

திருச்சிராப்பள்ளி காருகுடி தமிழ் கல்வெட்டு திருக்கயிலாசநாதர் கோயில் மகாமண்டபத்தின் கிழக்குச்சுவரில் உள்ளது. காசி போதுநாயகன் என்பவன் பைரவர் சிலையைப் பிரதிஷ்ட்டை செய்து அதன் வழிபாட்டுக்கு நிவந்தம் அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

**தட்சிணாமூர்த்தி சிற்பம் கொடை:**

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்துக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறையின் தென்புறம் தெக்ஷணா மூர்த்தி சிற்பத்தின் அருகில் உள்ள கல்வெட்டு வளஞ்சியர் என்ற சமூகப் பிரிவினைச் சேர்ந்த காதரைச் சிங்கம் என்பவன் இத்தேவரைச் செய்வித்தான் எனக் கூறப்பட்டுள்ள்து.இக்கல்வெட்டு தட்சிணா மூர்த்தி சிற்பத்தின் அருகில் உள்ளதால் அவன் செய்த தேவர் தட்சிணாமூர்த்தியே என்று கூறலாம்.

**திருவாரூர் நம்பி சிலை மற்றும் தேவரடியார்க்கு திருவமுதுப் படைக்கக் கொடை:**

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் மற்றும் கிரந்தம் கல்வெட்டு கி பி 1054 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.இரண்டாம் இராஜேந்திரனின் 4 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில்

அர்த்தமண்டப வடக்குச்சுவரில் உள்ள இக்கல்வெட்டில் இராஜாதி ராஜ வளநாட்டுக் குறுக்கௌ நாட்டு, கங்கைகொண்ட சோழச் சருப்பேதி மங்கலத்துத் திருவேள்விக்குடியிலுள்ள ஆளுங்கணத்து உறுப்பினராகிய கூவாண்டான் ஆடவலான் பட்டன் என்பவன் அவ்வூர்க் கோயிலில் திருவாரூர் நம்பியின் சிலையைச் செய்து வைத்து,அச்சிலைக்குத் திருவமுது படைப்பதற்காக 30 காசுகளையும் பெற்றுக் கொண்டு,அதன் வட்டி கொண்டு திருவமுது படைக்கவும் ,இச்சிலைக்குப் படைக்குப்படுகின்ற திருவமுதினை அக்கோயில் தேவரடியார்க்கு நித்தம் வழங்கவும் ஒப்புக் கொண்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 1074 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.இரண்டாம் இராஜேந்திரனின் 27 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடகபுற்சுவரில் இக்கோயில்ல் உள்ள சேத்ரபால தேவர்க்கு தினமும் அர்த்தயாமத்தில் அமுது படைத்து வழிபாடு செய்வதற்கு குண்டூர் கோவிந்த கிரமவித்தன் என்பவன் முதலீடாக வைத்த 60 கலம் நெல்லுக்குப் பலிசையாக(வட்டி) வரும் நெல் கோடும் செத்ரபால தேவர்க்குத் திருவமுது படைக்கப்படல் வேண்டும் என்றும் இக்கோயில் தேவரடியார்களுக்கு அமுது அளிக்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.தேவரடியார்களுக்கு அளிக்கப்பட்ட உணவு நம்பிமைத் திருவமுது என்று கூறப்பட்டதும் தேவரடியார்கள் மாஹேஸ்வரர்கள் என அழைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.மன்னனின் 27 ஆவது ஆட்சியாண்டில் தென் திருமுற்றத்தில் எழுந்தளியிருந்து கல்வெட்டிக் கொடுக்கப்பட்டது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை தெற்கு ஜகதியில் இறைவன் இறைவியர்க்குத் திருவமுது படைப்பதற்காக நாரணச் செட்டி என்பவன் முக்குறுணி நெல் கொடையளித்துள்ளான்.இத்தன்மத்தைக் கணப்பெருமக்களும் பன்மாஹேஸ்வரரும் காப்பாற்றித் தொடர்ந்து நடைமுறைப் படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

**கற்கள் கொடை:**

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 12,13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்துக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டப வடக்குச்சுவரில் அமர்நீதி அன்னியூர் நக்கன் என்ற கொ[று]க்கையை சேர்ந்த நிலக்கிழார் அர்த்தமண்டபத்திலுள்ள ஒரு கல்லைக் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறையின் மேற்குச்சுவரில் கோயிற் திருப்பணிக்கென வீரநாரணப் பல்லவரையர் பெண்டாட்டி கரைமல்ல நாணங்கை ஆறு கற்கள் இட்டதை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் மற்றும் கிரந்தம் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறையின் தெற்குச்சுவரில் சூலபாணி வேளூர் கிழவன் என்பவனும் மணையிற்கோன் அரும்பக்கமுடையான் என்பவனும் இக்கோயிற் பணிக்குத் தேவையான கல் மற்றும் சில கட்டடப் பகுதிகளைக் கொடையளித்துள்ள செய்தி காணப்படுகிறது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறையின் தெற்குச்சுவரில் இக்கோயிற் பணிக்குத் தேவையான ஒரு கல்லை சமிதன் வேளான் சோலை என்பவன் செய்தளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது.

திருவையாறு யோகி என்பவனின் மூன்று கல்வெட்டுகள் அவனது கோயிற்பணிகளைப் பற்றித் தெரிவிக்கின்றது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச்சுவரில் திருவேள்விக்குடியிலுள்ள இக்கோயிலின் ஒரு பகுதியை வளஞ்சியரும், நானாதேசி திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவரும் அவர் மக்களும்

எடுப்பித்துள்ளனர். இந்த வளஞ்சியர் என்பவர் அவ்வப்போது திருவேள்விக்குடி என்ற ஊரோடு கூடியும் பிரிந்தும் செல்வர் என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திருவேள்விக்குடி நம்பியாகிய திருவையாறு யோகியார் என்பவ்ரும் அவர் மகனாகிய திருவேள்விக்குடியில் ஸ்ரீகரணமாக இருக்கும் திருக்கற்றளிப் பித்தர் என்பரும் குறிப்பிபடுகின்றனர். இவர்கள் சார்பில் மேற்கூரிய வணிகர்கள் கோயில் எடுத்திருக்க வேண்டும்.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறையின் தென்புறச்சுவரில் கட்டடப் பகுதியாகிய தாடிப்படை,கால்படை, மற்றும் 14 கற்கள் ஆகியவற்றைக் கோயில் கட்டுவதற்காக நல்லூரரைச் சேர்ந்த திருவையாறு யோகி என்பவர் கொடையளித்துள்ள செய்தியைக் கூறுகிறது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் மற்றும் கிரந்தம் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர்காலக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச்சுவரில் நல்லூர் நாட்டுத் திருநல்லூரரைச் சேர்ந்த காச்சுவன் காடன் செட்டி என்ற திருவையாறு யோகி என்பவன் திருவேள்விக்குடியில் திருக்கோயில் கட்டடப் பணியின் போது வாழகத்தாடிப் படையளவுஞ் செய்து, தாடிப்படையும் கல்லால் செய்திருக்கிறான்.இவனே கஞ்சாறு நகரத்திலுள்ள நகரத்திலுள்ள நகரீஸ்வரம் என்ற கோயிலையும் எடுப்பித்துள்ளான் என்ற செய்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திருமஞ்சனம், தண்ணீரமுது, வெள்ளித்தளிகை செய்வதற்காக நிலக்கொடை:**

குணமலப்பாடியய்ச் சேர்ந்த அய்யன் மார சிங்கனான வீரசேகர மூவேந்த வேளான் என்பவனின் மூன்று கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகிறது.வெவேறு ஆண்டுகளில் அவனளித்த கொடைக் குறித்து இக்கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 982 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கோப்பரகேசரிவர்மன் (உத்தம சோழன்) 12 ஆம் ஆட்சியாண்டில்

*பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவரில் குணமலப்பாடியய்ச் சேர்ந்த அய்யன் மார சிங்கனான வீரசேகர மூவேந்த வேளான் என்பவன் இருவரிடமிருந்து நிலம் வாங்கி இக்கோயிலுக்கு வேண்டிய பதினைந்து கல நீரைக் காவேரி ஆற்றிலிருந்து கொணர்ந்து திருமஞ்சன நீராகப் பயன்படுத்துவதற்காகக் கொடையளித்த செய்தியும் அந்நிலத்திற்கு வடகரை குறுக்கை நாட்டுப் பிரமதேயம் விடேல் விடுகு தேவிச் சதுர்வேதி மங்கலத்து சபையோர் (பெருங்குழி பெருமக்கள்0 அவ்வூர் மண்டபத்தில் கூடியிருந்து வரி நீக்கம் (இறையிலி) செய்து கொடுத்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.*

*நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் மற்றும் கிரந்தம் கல்வெட்டு கி பி 984 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கோப்பரகேசரி (உத்தம சோழன்) 14 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவரில் குணமலப்பாடியய்ச் சேர்ந்த அய்யன் மார சிங்கனான வீரசேகர மூவேந்த வேளான் என்பவன் இக்கோயில் இறைவனுக்குத் தண்ணீரமுது படைப்பதற்காக வெள்ளித் தட்டம் ஒன்று கொடையளித்த செய்தியும் அத்தட்டத்தின் நிறை 30 ஈழக்காசு என்றும் கூறப்பட்டுள்ளது.*

*நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் மற்றும் கிரந்தம் கல்வெட்டு கி பி 974 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கோப்பரகேசரிபந்மர் (உத்தம சோழன்) 4 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை வடக்குச்சுவரில் குணமலப்பாடியய்ச் சேர்ந்த அய்யன் மார சிங்கனான வீரசேகர மூவேந்த வேளான் என்பவன் த்ருவேள்விக்குடி மகாதேவர்க்கு திருவமுது செய்வதற்காக ஊர்க்கல் என்னும் நிறையால் 400 கழஞ்சு வெள்ளி கொண்டு செய்யப்பட்ட வெள்ளித்தளிகை ஒன்று கொடையளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.*

**காளங்கள் அல்லது காசு கொடை:**

*நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 974 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. உத்தம சோழனின் 4 ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் தெற்கு அர்த்தமண்டபச்சுவரில் திருவேள்விக்குடி இறைவனுக்கு இளைய வாள் பெற்ற கக்கோளர்களில் பனையன் கோதண்டம் என்பவன் இரண்டு காளங்கள் கொடையளித்துள்ள செய்தியும் அதன் நிறையும் கூறப்பட்டுள்ளது. (இந்திய கல்வெட்டில் காசுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது)*

*நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த (இராசகேசரிபன்மர்) சோழர்காலக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் அர்த்தமண்டபத் தெற்கு ஜகதியில் அம்பர் நாட்டு அம்பர் என்ற ஊரிலுள்ள திருவளிச்சகத்தாள் சேரியைச் சேர்ந்த வியாபாரி ஒருவன் திருவேள்விக்குடி இறைவனுக்கு ஒரு காசு கொடை அளித்தது பற்றிக் கூறப்பட்டுள்ளது. எதற்காக அக்காசு கொடையளிக்கப்பட்டது என்பதைத் தெரிவிக்கும் பகுதி சிதைந்துள்ளது. இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில் காளமாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.*

**பொதுமக்கள் கொடை:**

*நாகப்பட்டினம் திருவேள்விக்குடி தமிழ் கல்வெட்டு கி பி 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்துக் கல்வெட்டு. மணவாளேஸ்வரர் கோயில் கருவறை தெற்குச்சுவரில் இக்கோயிலின் திருப்பணிக்குப் பொதுமக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் உதவியுள்ளனர்.அவ்வகையில் கைக்கோளர் சிலரும் கற்கள் இட்டுப் பணி செய்துள்ளனர் என்பது இத்துண்டுக் கல்வெட்டால் அறியப்படுகின்றது.*

**முடிவுரை:**

இதுகாறும் பார்த்த கல்வெட்டுகள் வாயிலாக குடிமக்கள் பலர் கோயிலுக்காக பல கொடைகளை அளித்துள்ளனர். இவற்றில் கோயிலுக்கு விளக்கு ஏற்றுவதற்காக கொடைகள் ஏராளமாக தந்துள்ளனர். பக்க விரிவு கருதி அவற்றை இங்கு குறிப்பிடவில்லை. தமிழகத்தின் ஆயிரக்கணக்கான கோயிலில் பல கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ,இந்திய தொல்லியல் துறை மற்றும் தனி ஆர்வலர்கள் என பல்வேறு கல்வெட்டுகள் வாசிக்கப்பட்டுள்ளன. அவற்றில் எல்லாம் குடிமக்களின் பல்வேறு கொடைகள் பற்றிய செய்திகள் உண்டு. இக்கட்டுரையில் சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே சுட்டப்பட்டுள்ளது. நமது தொன்மையினைப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

**துணைநின்ற நூல்கள்:**


1.தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்(2004),தி.ஶ்ரீ.ஶ்ரீதர் ,(பதி),தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,சென்னை.முதற்பதிப்பு;2004.

2.தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்(2004),தி.ஶ்ரீ.ஶ்ரீதர் ,(பதி),தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,சென்னை.முதற்பதிப்பு;2005.

3. கல்வெட்டு:37/1913)

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2023, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் ஏப்ரல் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879